**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.144/2024**

**<u>தேதி : 03.03.2026</u>**

**<u>(பி.வா.சா.2) – திரு . ராஜ்மோகன்</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)</u>**

1. நான் B.E. Mechanical Engineering படித்துள்ளேன். கிரைய உடன்படிக்கை பற்றித் தெரியுமா என்றால் அப்படி ஒரு ஆவணமே கிடையாது. நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் இருக்கும் கையொப்பம் என்னுடையதுதான். வா.சா.ஆ.2ல் நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்கத்தெரியும். கையெழுத்து போடுவதற்கு முன்பாக வா.சா.ஆ.2 ஆவணத்தை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன்.

2. வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை. என் தகப்பனார் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியவில்லை. வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றும், அதனை மறைத்து பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 பதிலறிவிப்பு என் தகப்பனார் அனுப்பியது என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பை எனக்கும் சேர்த்துத்தான் பதில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம், ஆனால் எனக்கு அது பற்றி தெரியாது.

3. வழக்குச் சொத்தைப் பொறுத்து என் தகப்பனார் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா பெறப்பட்டுள்ளதா என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை. எனக்கும் சேர்த்துதான் என் தகப்பனார் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனக்கும் சேர்த்துதான் என் தகப்பனார்

சாட்சியமளித்துள்ளார் என்றால் சரிதான். அதனால் நான் தனிப்பட்ட முறையில் சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. நான் எனது வாக்குமூலத்தில் கூறியுள்ள விபரங்களுக்கு ஆதாரங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. நானும், என் தந்தையும், என் சகோதரர் 3ம் பிரதிவாதியும் தாவாச்சொத்துக்களை கிரையம் கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான் வா.சா.ஆ.2 கிரைய உடன்படிக்கை ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தற்போது வழக்குச் சொத்துக்களின் மதிப்பு அதிகமாகிவிட்டதால், நாங்கள் பொய்யாக எதிர்வாதம் செய்வதாகச் சொன்னால் சரியல்ல. நான் கிரைய உடன்படிக்கையின்படி வாதிக்கு வழக்குச் சொத்துக்களை கிரையம் பதிந்து கொடுக்கக் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.03 18:21:19 +0530

Additional Sub Judge,
Palani.